நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு ஜீன் மாதம் – 30–ம் நாள் வியாழன் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரன கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 30–06–2022 | பொருள் எண்.1<br>அரசாணை (MS) எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள்.17–06–2022 ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் அம்ரூத் 2.0, 2022–23ம் ஆண்டிற்கு நகராட்சி வார்டு எண்.1, நகராளவு வார்டு எண்.6, பிளாக் எண்.5, நகரளவு எண்.259–ல் பெருமாள் கோயில் குளம் மேம்பாடு செய்யும் பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் நிதி 10.10 இலட்சம் மற்றும் அம்ரூத் 2.0 நிதி ரூ.44.80 இலட்சம் மொத்தம் ரூ.54.90 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடும் நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ள அரசாணைமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2 திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்<br>ந.க.எண்.1142–2/2022/இ1 | தீர்மானம் எண். 167<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.2<br>2022–2023 ஆம் ஆண்டிற்கான நகராட்சி பணிக்கு தேவையான படிவங்கள், எழுதுபொருட்கள், ஏ4, ஏ3, பேப்பர்கள் சேவை மையம் கணிணிக்கு தேவையான வரிவசூல் மைய ரசீதுகள் மற்றும் கணிணிக்கு தேவையான உபகரணங்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1260/2022/எச்3 | தீர்மானம் எண். 168<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.1 சிவன் கோயில் வடக்கு தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூராக உள்ளதால் புதிதாக சிறுபாலம் கட்டவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3 ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரலாம்.<br>ந.க.எண்.845–2/2020/இ1 | தீர்மானம் எண்.169<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.31 பெருமாள் கோயில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை பழுதடைந்து போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூராக உள்ளதால் சிமெண்ட் சாலையில் பேட்ச் ஒர்க்செய்யவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.05 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3 ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரலாம்.<br>ந.க.எண்.845–3/2020/இ1 | தீர்மானம் எண்.170<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-06-2022 | பொருள் எண்.5<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.32 சட்டையப்பர் மேல வீதி, வார்டு எண்.31 பெருமாள் வடக்கு வீதி மற்றும் பெருமாள் மேலவீதி, திருமேனிச்செட்டி தெருவிலுள்ள சிமெண்ட் சாலை பழுதடைந்து போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூராக உள்ளதால் சிமெண்ட் சாலையில் பேட்ச் ஒர்க்செய்யவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.30 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3 ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரலாம்.<br>ந.க.எண்.845-4/2020/இ1 | தீர்மானம் எண்.171<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30-06-2022 | பொருள் எண்.6<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டுஎண்.11 சாமந்தான்பேட்டை பகுதியிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் மற்றும் கழிவறை தரைதளம் சேதமடைந்துள்ளதால் அப்பள்ளி மாணவர்களுக்கு சிரமமாக உள்ளது. எனவே அதனை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 பள்ளி மாணவர்களின் நலனை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்துபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3 இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845-12/2022/இ1 | தீர்மானம் எண்.172<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30-06-2022 | பொருள் எண்.7<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள கழிவறைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.75 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. 1. சந்தை தோப்பு, 2.வ.ஊ.சி.தெரு, 3.அட்டைக்குளம், 4.சலவைக்குளம் முகமதியார் தெரு, 5.தர்மகோயில் தெரு, 6.கீழ்பட்டிணச்சேரி, 7.அம்பேத்கார் நகர், 8.நல்லியான்தோட்டம்<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 தூய்மை பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.845-13/2022/இ1 | தீர்மானம் எண்.173<br>அ,கு,<br>அங்கீகரிக்கப்பட்டது |
| 30-06-2022 | பொருள் எண்.8<br>மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வராந்திர ஆய்வுக்கூட்டத்தில் நாகப்பட்டினம் அரசு ஐ.டி.ஐ வளாகத்தில் நடைபெற உள்ள புத்தக திருவிழாவை முன்னிட்டு புத்தக திருவிழா நடைபெற உள்ள இடத்தில் தற்காலிக கழிவறை நகராட்சியால் அமைத்து தர தெரிவிக்கப்பட்டதன் பேரில் தற்காலிக கழிவறை கட்டவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 தூய்மை பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நிதி பெற்று ஈடு செய்து கொள்ளலாம்<br>ந.க.எண்.845-14/2022/இ1 | தீர்மானம் எண். 174<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30–06–2022 | பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகராட்சி மேலக்கோட்டை வாசலில் உள்ள குப்பை கிடங்கில் MCC கட்டடத்தில் ஜி.ஐ.ஷீட் கொண்டு அடைக்கும் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 தூய்மை பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845/16–2022/இ1 | தீர்மானம் எண்.175<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைப்பணி மற்றும் பொதுசுகாதாரப்பணியின் கீழ் நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தினந்தோறும் சேகரிக்கப்படுகிற குப்பைகள் தரம் பிரிப்பதற்கு தேவையான 200 லிட்டர் கொள்ளவு கொண்ட 50 பிளாஸ்டிக் குப்பைக் கூடைகள் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.50,000/–க்குள் தருவித்துக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியத்தைக் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் அனுமதிப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 பணியின் அவசர அவசியத்தைக் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் அனுமதிப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2395/2015/எச்1 | தீர்மானம் எண்.176<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.11<br>இந்நகராட்சிக்குட்பட்ட திருவாரூர் ரோட்டில், வாகனங்கள் எடைபார்க்கும் மின்னனு நிலையம் அமைக்கப்பட்டு குத்தகை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிலையத்தில் 10–டன் திறன் கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. 2021–2022ம் ஆண்டின் குத்தகைதாரர் திரு.எம்.காளிதாஸ் என்பவர் மின்னனு இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதாகவும், மூந்தைய கால வாகன அளவுக்கு தகுந்தார்போல் அமைந்துள்ளதாலும், சிறிய வாகனங்கள் மட்டுமே எடை போடும் நிலை உள்ளதால், போதுமானதாக வசூல் இல்லை எனவும், எடைபோடும் இயந்திரத்தின் தரம் 40–டன் திறன் கொண்ட அளவில் எடை போட வழிவகை செய்து தருமாறு கோரியுள்ளார். குத்தகைதாரரின் கோரிக்கையினை பரிசீலித்து குத்தகைதாரரின் சொந்த செலவில் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு 40–டன் திறன் கொண்ட இயந்திரம் பொருத்துவதற்கும் தற்போது உள்ள குத்தகை தொகையினை உயர்த்தி மறு நிர்ணயம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>மன்றத்தின் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4370/2017/அ4 | தீர்மானம் எண். 177<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.12<br>இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத் மார்க்கெட்டில் அமைந்துள்ள பழைய கடைகளை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிதாக கடைகள் கட்டுவதற்கு அரசாணை (MS) எண்.16 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20–01–2022 கலைஞர் நகர்புற மேம்பாட்டு நிதி (KNMT) 2021–2022ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி பழைய கடைகள் இடித்து அப்புறப்படுத்தி புதிய கடைகள் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதில் பழைய கடைகளின் குத்தகைதாரர்கள் (1) எ.ஜி.சிவசாமி த/பெ.கோவிந்தசாமி (2)செய்யது முஹம்மது த/பெ.யாகூப் (3) கே.ராம்குமார் த/பெ.கேசவன் (4) ஜி.பாண்டுரெங்கன் (5) ஜி.கேசவன் த/பெ. கோவிந்தசாமி (6) ஆர்.ஜெய்சங்கர் த/பெ.ராமலிங்கம் (7) என்.செல்வம் த/பெ.நல்லு (8) ஹசன் உசேன் த/பெ.ஹபீப் முஹம்மது (9) வி.பி.கணபதியாபிள்ளை த/பெ.பக்கிரிசாமி (10) செல்லம்மாள் க/பெ.பக்கிரிசாமி ஆகிய பத்து நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.A.D.No.15185, 15188, 15191, 15192 , 15193, 15194, 15196, 15197, 15198, 15199/2022- ன் மீது நகராட்சி சார்பாக அரசு மூத்த வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் என்பவரை கொண்டு எதிர்வழக்காடுவதற்கும் அதற்கான செலவினம் ரூ.1,11,000/–க்கும், மேற்படி வழக்குகள் நகராட்சிக்கு சாதகமாக தள்ளுப்படி | தீர்மானம் எண். 178<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்து உத்தரவிடப்பட்டுள்ளதால், வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2327/2022/அ4 | |
| 30–06–2022 | பொருள் எண்.13<br>இந்நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.42 மற்றும் 44–ல் அரசு அனுமதி பெறாமல் மதுபானகூடம் (பார்) நடத்தி வந்ததாகவும், கடையினை உள்வாடகைக்கு விடப்பட்டதாகவும் திரு.த.சுந்தரவடிவேல் என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவித்திருந்தார். மேற்படி புகார் மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களின் நேரடி விசாரணையில் குத்தகை விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டதாக உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களின் ஆணை எண்.095/ந/2021, நாள்.27–12–2021–ல் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டது. அதன்படி இந்நகராட்சியால் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு கடையினை பூட்டி நகராட்சி வசம் கையெகப்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து 1) திரு.எம்.செந்தில்சிவகுமார் 2) திரு.ஆர்.ரெங்கசாமி ஆகியோரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.3832,3839/2022 –மீது நகராட்சி சார்பாக அரசு மூத்த வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் என்பவரை கொண்டு எதிர்வழக்காடப்பட்டதில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களால் மறு விசாரணை மேற்கொண்டு இறுதி உத்தரவு வழங்க 14–03–2022–ல் ஆணையிடப்பட்டுள்ளது.<br>உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களால் 25–04–2022 அன்று முறையீட்டு மனுதாரர் திரு.த.சுந்தரவடிவேல் எதிர்மனுதாரர்கள் (1) ஆணையர் நாகப்பட்டினம் நகராட்சி (2) திரு.ஆர்.ரெங்கசாமி (3) திரு.எம்.செந்தில்சிவகுமார் ஆகியோரிடம் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் நாகப்பட்டினம் புதிய பேருந்துநிலைய கடை எண்.42 மற்றும் 44–ன் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள கடைகளை உடனடியாக திறந்துவிடவும், குத்தகை உரிமத்தினை மீண்டும் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி குத்தகை உரிமம் மீண்டும் ஒப்படைத்து 27–04–2022ல் உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.3832,3839/2022 –மீது நகராட்சி சார்பாக எதிர்வழக்காடியதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/–ம் வழங்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.3469/2021/அ4 | தீர்மானம் எண். 179<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.14<br>நாகப்பட்டினம் நகராட்சி கோட்டைவாசல் குப்பை கிடங்கில் தொடர்ந்து சில சமூக விரோதிகளால் அங்குள்ள பொருட்கள் திருடப்பட்டு வருவதால் குப்பைகிடங்கிலுள்ள குப்பைகள் அகற்றும் பணி (BIO MINING) பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே குப்பை கிடங்கில் CC TV கேமரா பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br><br>ந.க.எண்.845–17/2022/இ1 | தீர்மானம் எண். 180<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.15<br>நாகப்பட்டினம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு அலுவலகங்களில் தூய்மை பணியாளர்களின் வருகையை Bio Matric வருகை பதிவேட்டில் பதிவு செய்ய Bio Matric Unit பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br><br>ந.க.எண்.845–18/2022/இ1 | தீர்மானம் எண். 181<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

30–06–2022

பொருள் எண்.16

நாகப்பட்டினம் நகராட்சியின் திட்டப்பணி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு மற்றும் பொது ஏலம் அறிவிப்பு ஆகியவைகளை விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணங்கள் கீழ்கண்டவாறு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் விவரம் | விளம்பர நிறுவனம் | தொகை விவரம் ரூ |
|---|---|---|---|
| 1 | 15–வது மத்திய நிதிக்குழு ஆணையம் நிதி 2021–22 நாகூர் பீரோடு தெருவில் தார்சாலை மற்றும் வடிகால் அமைத்தல் | தின பூமி | 11844.00 |
| 2 | ஆசாத் மார்க்கெட் பழைய கட்டடம் இடிக்கும் பணி ஏலம் | தின செய்தி | 4500.00 |
| 3 | நாகப்பட்டினம் மற்றும் நாகூர் STP யில் OCEMS பொருத்தும் பணி | தின செய்தி | 9450.00 |
| 4 | நாகூர் யானைக்கட்டி முடுக்கு தெருவில் பொது கழிவறை கட்டுதல் | எக்ஸ்பிரஸ் பப்ளிக்கேசன் | 2922.00 |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பாதாளசாக்கடை நிதியில் மேற்கொள்ளலாம். |

ந.க.எண்.792/2022/இ1

தீர்மானம் எண். 182
அ.கு
அனுமதிக்கப்பட்டது

30–06–2022

பொருள் எண்.17

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17021/2021/இஏ1 நாள்.11–04–2022 ல் மூலதன மான்யம் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி 2021–22ன் கீழ்பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்தும் நகராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் நாகப்பட்டினத்தில் இப்பணியை மேற்கொள்ள 18–05–2022 ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீ விகித குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Supply, Erection and Commissioning of Online Continuous Effluent Monitoring system (OCEMS) for the parameters namely PH, TSS, COD, BOD and Electromagnetic flow Meter for 9.63 MLD STP at Nagapattinam | 49.05 | ஆர்.எல்.டெக்னாலஜி 2,18,1வது தெரு, கார்ப்ரேசன் காலனி, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை 24 | 0.02% |
| | | | சுவராஜ் எக்யூப்மெண்ட் பிரைவேட் லிட், எண்.53, அண்ணாஜிராவ் நகர், வேம்புலியம்மன் கோயில் தெரு, மேற்கு, கே.கே.நகர். சென்னை.78 | -- |

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | இத்திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் L 1 ஆர்.எல்.டெக்னாலஜி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ஒப்பந்ததொகையை விட 0.02% குறைவாக உள்ளது எனவே மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம். |
| | 2 | திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.1441/2022/இ1

தீர்மானம் எண். 183
அ.கு
அனுமதிக்கப்பட்டது

| 30–06–2022 | பொருள் எண்.18 | தீர்மானம் எண். 184<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17021/2021/இர1 நாள்.11–04–2022 ல் மூலதன மான்யம் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி 2021–22ன் கீழ்பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்தும் நகராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் நாகூரில் இப்பணியை மேற்கொள்ள 18–05–2022 ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவு | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | Supply, Erection and Commissioning of Online Continuous Effluent Monitoring system (OCEMS) for the parameters namely PH, TSS, COD, BOD and Electromagnetic flow Meter for 2.96 MLD STP at Nagapattinam | 41.05 | ஆர்.எல்.டெக்னாலஜி 2,18,1வது தெரு, காா்ப்ரேசன் காலணி, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை 24 | 0.02 % | -- | L 1 |
| | | | சுவராஜ் எக்யூப்மெண்ட் பிரைவேட் லிட், எண்.53, அண்ணாஜிராவ் நகர், வேம்புலியம்மன் கோயில் தெரு, மேற்கு, கே.கே.நகர். சென்னை–78 | -- | 1.53 % | L 2 |

| அலுவலக குறிப்பு | 1 | இத்திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் L1 ஆர்.எல்.டெக்னாலஜி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ஒப்பந்ததொகைக்கே 0.02% உள்ளது. எனவே திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம். |
|---|---|---|
| | 2 | திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.1441/2022/இ1

| 30–06–2022 | பொருள் எண்.19 | தீர்மானம் எண்.185<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021–22ம் ஆண்டிற்கு சமுதாய கழிவறைகள் மற்றும் புதுக்கழிவறைகள் கட்டுதல் மேம்பாட்டு செய்வதற்கு மாநில உயர்மட்ட குழு 2–வது கூட்டம் நாள்.26–02–2022ல் அனுமதிக்கப்பட்டதன் படி கீழ்கண்டுள்ள இப்பணியை மேற்கொள்ள 19–05–2022 ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவு | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.8 | 36.28 | திரு.எஸ்.சொக்கலிங்கம் எண்.22, சட்டையப்பர் | 0.03 % | -- | L 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | யானைக்கட்டி முடுக்கு தெருவில் புதிதாக பொது கழிவறை கட்டுதல் | | மேலவீதி, நாகப்பட்டினம். | | | |
| | | | | ஆர்.ராஜேந்திரன் ஆய்க்கரான்புலம், வேதாரண்யம். | -- | 1.20 % | L 2 |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | இத்திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் L1திரு.எஸ்.சொக்கலிங்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.03% குறைவாக உள்ளது. எனவே திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம். |

ந.க.எண்.1448/2022/இ1

30-06-2022

பொருள் எண்.20

நாகப்பட்டினம் நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23 ற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 02-06-2022ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சீர் செய்தல் | 4.50 | ஜி.தேவராஜன் | 0.05% | -- |
| | | | எம்.ஆர்.குணசீலன் | -- | 1.50% |
| 2 | வார்டு எண்.19 முதல் 36 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகள் சீர் செய்தல் | 4.50 | கே.கோபாலகிருஷ்ணன் | 0.04% | -- |
| | | | எஸ்.சத்தியநாராயணன் | -- | 1.05% |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையம் ஒடாச்சேரி மற்றும் குருக்கத்தி நீர் உந்து நிலையங்களில் இருந்து வரும் குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சீர் செய்தல் | 3.00 | எம்.பிரபாகரம் | 0.07% | -- |
| | | | என்.செந்தில்குமார் | -- | 1.25% |
| 4 | தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் உந்து நிலையங்களிலுள்ள 2 எச்.பி.முதல் 50 எச்.பி.வரையுள்ள மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்தல் | 5.00 | அமரா கன்ஸ்ரக்சன் நாகப்பட்டினம் | 0.03% | -- |
| | | | என்.செந்தில்குமார் | -- | 1.10% |
| 5 | பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்களிலுள்ள 1 | 5.00 | அமரா கன்ஸ்ரக்சன் நாகப்பட்டினம் | 0.04% | -- |

தீர்மானம் எண்.186

அ.கு

அனுமதிக்கப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எச்.பி. முதல் 80 எச்.பி.வரையுள்ள மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மோட்டார் காயில் மாற்றுதல் மற்றும் பம்பு வேலைகள் மற்றும் இதர பணிகள் | | என்.செந்தில்குமார் | -- | 1.30% |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.845/2022/இ1

30–06–2022

பொருள் எண்.21

நாகப்பட்டினம் நகராட்சியில் கல்வி நிதி 2022–23 ற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 02–06–2022ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்.187
அ.கு
அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.16 நம்பியார் நகரிலுள்ள தொடக்கப்பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் மற்றும் கழிவறையை சீர் செய்தல் | 10.00 | கே.கோபாலகிருஷ்ணன் | 0.05% | -- |
| | | | எஸ்.கருணாநிதி | -- | 1.10% |
| 2 | வார்டு எண்.18 நெல்லுக்கடை தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்று சுவர் மற்றும் கழிவறை கட்டடம் கட்டுதல் | 10.00 | பி.ரகுநாதன் | 0.04% | -- |
| | | | வி.ஆர்.பிரபாகரன் | -- | 1.05% |
| 3 | வார்டு எண்.26 கல்லுக்காரத்தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்று சுவர் அமைத்தல் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 10.00 | எம்.பிரபாகரன் | 0.05% | -- |
| | | | என்.செந்தில்குமார் | -- | 1.20% |
| 4 | வார்டு எண்.13 பால் பண்ணைச்சேரி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டடம் பழுது சீர் செய்தல் | 5.00 | ஆர்.பி.சந்திரகாந்தன் | 0.03% | -- |
| | | | எஸ்.சத்தியநாராயணன் | -- | 1.00% |
| 5 | வார்டு எண்.27 காளியம்மன் சன்னதி நகராட்சி தொடக்கப்பள்ளியில் கழிவறை மற்றும் கழிவு நீர் குழாய் பழுது சீர் செய்தல் | 5.00 | கே.கோபாலகிருஷ்ணன் | 0.05% | -- |
| | | | எஸ்.சத்தியநாராயணன் | -- | 1.10% |
| 6 | வார்டு எண்.25 புதுத்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடம் பழுது சீர் செய்தல் | 10.00 | கே.கோபாலகிருஷ்ணன் | 0.04% | -- |
| | | | எஸ்.கருணாநிதி | -- | 1.10% |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். | |
| | ந.க.எண்.1037/2022/இ1 | |
| 30–06–2022 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சியில் பொது நிதி மற்றும் கல்வி நிதி 2022–23 ற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 17–06–2022ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு. | தீர்மானம் எண்.188<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.1 சிவன் கோயில் வடக்கு வீதியில் சிறுபாலம் கட்டுதல் | 1.20 | எஸ்.சத்தியநாராயணன் | 0.02% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 0.90% |
| 2 | வார்டு எண்.31 பெருமாள் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை பேட்ச் ஒர்க்ஸ் | 1.05 | எஸ்.சத்தியநாராயணன் | 0.03% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 0.70% |
| 3 | வார்டு எண்.32 சட்டையப்பர் மேல வீதி வாரர் எண்.31 பெருமாள் வடக்கு வீதி , பெருமாள் மேலவீதி மற்றும் திருமேனிச்செட்டித்தெருவில் சிமெண்ட் சாலை பேட்ச் ஒர்க்ஸ் | 2.30 | எஸ்.சத்தியநாராயணன் | 0.05% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 1.10% |
| 4 | நாகப்பட்டினம் நகராட்சி மேலக்கோட்டை வாசலில் உள்ள குப்பை கிடங்கில் MCC கட்டடத்தில் ஜி.ஐ.ஷீட் கொண்டு தடுப்பு அமைத்தல் | 4.50 | எஸ்.சத்தியநாராயணன் | 0.04% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 1.00% |
| 5 | நாகப்பட்டினம் நகராட்சி நாகப்பட்டினம் பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள 8 கழிவறைகளை சீரமைக்கும் பணி | 4.75 | எஸ்.சத்தியநாராயணன் | 0.06% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 1.30% |
| 6 | வார்டு எண்.11 சாமதான்பேட்டை நடுநிலைப்பள்ளி கட்டடம் மற்றும் கழிவறை பழுது சீர் செய்தல் | 4.50 | எஸ்.சத்தியநாராயணன் | 0.02% | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் | -- | 1.10% |
| 7 | அரசு ஐ.டி.ஐ வளாகத்தில் புத்தக திருவிழா நடைபெறும் இடத்தில் தற்காலிக கழிவறை 20 எண்ணிக்கை அ மைத்தல் | 1.00 | பிர.ரகுநாதன் | 0.03% | -- |
| | | | என்.செந்தில் குமார் | -- | 0.80% |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்<br>ந.க.எண்.845–12/2022/இ1 | |
| 30–06–2022 | பொருள் எண்.23<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 15–வது வார்டுக்குட்பட்ட காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திலிருந்து செபஸ்தியார் கோவில் செல்லும் குறுக்கு சாலை மிகவும் சேதமடைந்து போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் சீரமம் ஏற்படுவதால் மேற்படி சாலையினை செப்பனிட்டு தரவும்<br>➢ புதிய கடற்கரை சாலைக்கு எதிரே உள்ள எ.டி.ஜே அவன்யூ –ல் குறுக்கு சாலைகள் இரண்டு சேதமடைந்து உள்ளது. போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் சீரமம் ஏற்படுவதால் மேற்படி சாலையினை செப்பனிட்டு தரவும் .<br>➢ பொதுப்பணித்துறை அலுவலகர்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியில் சாலை வசதி இல்லாததால் அப்பகுதிக்கு சாலை வசதி ஏற்படுத்தி தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.<br>➢ மேட்டு பங்களா மறைமலை நகருக்கிடையே காம்பவுண்டு சுவர் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.189<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.24<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.சுபஸ்ரீ அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 18–வது வார்டுக்குட்பட்ட ராமநாயகன்குளத்தெருவில் உள்ள மழைநீர் வடிகால் நீண்டகாலமாக துார்வாரப்படாததால் மழைநீர் வெளியேருவதில் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே மேற்படி மழைநீர் கால்வாயினை துார்வாரி செப்பனிட இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.190<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.25<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஜி.சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>➢ 20–வது வார்டுக்குட்பட்ட சலவைக்குளம் தூர்வாரப்படாததால் அப்பகுதியில் வசிக்கும் 150–க்கு மேற்பட்ட சலவை தொழிலாளர்களின் குடும்பங்கள் மற்றும் மயான கொட்டகை (சுடுகாடு) வந்துச்செல்லும் பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே மேற்படி சலவைக்குளத்தினை துார்வாரி படித்துறையுடன் சுற்றுசுவர் அமைக்கவும்.<br>➢ பெருமாள் கோயில் வடக்கு சந்து சாலை சேதமுற்று போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மேற்படி சாலையினை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.191<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.26<br>நகரமன்ற உறுப்பினர் திரு.எம்.ஜாகீர் உசேன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢25–வது வார்டுக்குட்பட்ட புதுத்தெருவில் அமைந்துள்ள நகரவை தொடக்கப்பள்ளியில் நூலக வசதி மற்றும் உணவிட வசதி போன்றவற்றினை அமைத்து தர மும்பையைச்சேர்ந்த ப்ளு சிப் கார்ப்பரேட் இன்வஸ்ட்மென்ட் சென்டர் நிறுவனம் இசைவு தெரிவித்துள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு நகரவை பள்ளியில் மேற்படி வசதிகள் அமைத்து தருவதற்கு தடையின்மை சான்று வழங்க இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.192<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.27<br>நகரமன்ற உறுப்பினர் திருமதிக.சத்தியவாணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>➢ 31–வது வார்டுக்குட்பட்ட எருத்துக்காரத்தெரு, எருத்துக்காரதென்சந்து, நாணயகாரத்தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சேதமுற்று போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் சிரமம் ஏற்படுவதால், மேற்படி சாலையினை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.193<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.28<br>நகரமன்ற உறுப்பினர் திருமதிகி.கவிதா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 32–வது வார்டுக்குட்பட்ட பெருமாள் தெற்கு வீதி, பெருமாள் மேலவீதி, சட்டையப்பர் சன்னதி ஆகிய பகுதிகளில் மின் விளக்கு இல்லாத இடங்களில் புதிதாக ஐந்து தெருவிளக்குகள் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.194<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30–06–2022 | பொருள் எண்.29<br>நகரமன்ற உறுப்பினர் திரு.ஆர்.ஏ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 34–வது வார்டுக்குட்பட்ட கீரைக்கொல்லைத்தெரு, வேப்பிள்ளை காளியம்மன் கோவில் தெருவில் உள்ள நகராட்சி பள்ளியில் செல்லும் கழிவுநீர் கால்வாய் சேதமுற்றுள்ளதால் பள்ளி செல்லும் குழந்தைகள் மிகுந்த சிரமப்படுகின்றனர். ஆகவே மேற்படி, பகுதியில் கழிவுநீர் கால்வாயினை புதிதாக அமைக்கவும்.<br>➢ கீரைக்கொல்லைத்தெரு, வேப்பிள்ளை காளியம்மன் கோவில் தெருவில் உள்ள நகராட்சி பள்ளியில் செல்லும் சாலையில் சிறுபாலம் மற்றும் கழிவுநீர் கால்வாய் சேதமுற்றுள்ளதால் பள்ளி செல்லும் குழந்தைகள் மிகுந்த சிரமப்படுகின்றனர். ஆகவே மேற்படி, பகுதியில் சிறுபாலம் மற்றும் கழிவுநீர் கால்வாயினை புதிதாக அமைத்தும் தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.195<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.30<br>நகரமன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 35–வது வார்டுக்குட்பட்ட சேவாபாரதி மற்றும் காமராஜர் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்படாததால் அப்பகுதி மக்கள் குடிநீர் பெறுவதில் மிகுந்த சிரமப்படுகின்றனர். ஆகவே மேற்படி பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்த தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.196<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.31<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி பா.கலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 23–வது வார்டுக்குட்பட்ட தெற்கு நல்லியான் தோட்டம் மற்றும் வடக்கு நல்லியான் தோட்டம் பகுதியில் பாதாளசாக்கடை இணைப்பு இல்லாததால், வடிகால் சாக்கடை வசதி தான் உள்ளது, சாக்கடை சரிவர பராமரிக்கப்படாததால் சாக்கடைஅடைப்பு ஏற்பட்டு மழை காலங்களில் மழைநீர் வெளியேறுவதில் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே சாக்கடையை செப்பனிடவும்.<br>➢ கூக்ஸ் நகர் பகுதியில் அமைந்துள்ள சாலை முற்றிலும் சேதமுற்று போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுவதால், மேற்படி சாலைகளை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.197<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.32<br>நாகப்பட்டினம் நகராட்சி 11வார்டு எண்.35 டாடா நகர் சுனாமி குடியிருப்பில் சுமார் 800 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இப்பகுதியில் செல்லும் குடிநீர் குழாய் சேதமடைந்து குடிநீர் போகாத காரணத்தால் பொதுமக்களுக்கும் குடிநீர் வழங்க இயலாத காரணத்தால் புதிதாக குடிநீர் குழாய் அமைக்கவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–29/2022/இ1 | தீர்மானம் எண்.198<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2022 | பொருள் எண்.33<br>நாகப்பட்டினம் நகராட்சி 11வார்டு எண்.30 புதுமனைத்தெருவிலுள்ள சிமெண்ட் சாலை பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதில் பழுதடைந்து போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும், பெரிதும் சிரமமாக உள்ளதால் சிமெண்ட் சாலை அமைத்திடவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>3 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–22/2022/இ1 | தீர்மானம் எண்.199<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td rowspan="4">30–06–2022</td><td colspan="3">பொருள் எண்.34<br>நாகப்பட்டினம் நகராட்சி 12வார்டு எண்.30 கமாலியா பள்ளி தெருவிலுள்ள சிமெண்ட் சாலை பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதில் பழுதடைந்து போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும், பெரிதும் சிரமமாக உள்ளதால் சிமெண்ட் சாலை அமைத்திடவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.</td><td rowspan="4">தீர்மானம் எண்.200<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>3</td><td>இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்</td></tr>
<tr><td></td><td colspan="3">ந.க.எண்.845–17/2022/இ1</td><td></td></tr>
</table>

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர் நாகப்பட்டினம்